# முகவுரை

மார்ச் 2023-உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு, சட்டமன்றத்தில் வைக்கப்படும் பொருட்டு தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை, ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2024 வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தை செயல்படுத்துதல் மீதான செயலாக்கத் தணிக்கையின் முடிவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள நேர்வுகள், செப்டம்பர் 2022 முதல் மே 2023 வரை மற்றும் ஜூலை 2024 வரையில் மேற்கொள்ளப்பட்ட இச்செயலாக்கத் தணிக்கையில் கவனிக்கப்பட்டவை. இத்தணிக்கை காலத்திற்கு அப்பாற்பட்ட தணிக்கைக் குறிப்புகளும் இவ்வறிக்கையில் தேவைப்படும் இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.